www.Padasalai.Net

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை-6
ந.க.எண். 068826/எம்/இ2/2022 நாள். .05.2024

பொருள்: பள்ளிக்கல்வி – அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ/ மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை (அ) தாய் விபத்தில் இறந்து விட்டாலோ – நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ/ மாணவியர் ஒவ்வொருவருக்கும் நிதியுதவி வழங்கும் திட்டம் – EMIS Portal வழியாக கருத்துருக்கள் சமர்பித்தல்– தொடர்பான அறிவுரைகள் வழங்குதல்–தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.39, பள்ளிக்கல்வி(இ2)த் துறை, நாள்.30.03.2005
2. அரசாணை (நிலை) எண்.127, பள்ளிக்கல்வி(இ2)த் துறை, நாள்.01.07.2005
3. அரசாணை (நிலை) எண்.195, பள்ளிக்கல்வி(ப.க5(2))த் துறை, நாள்.27.11.2014
4. அரசாணை (நிலை) எண்.113, பள்ளிக்கல்வி(ப.க5(2))த் துறை, நாள்.30.06.2023
5. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் , சென்னை ந.க.எண். 068826/எம்/இ2/2022 நாள்.08.09.2023

..........

பார்வை (1) மற்றும் (2) காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ளவாறு, அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ/ மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை (அ) தாய் விபத்தில் இறந்து விட்டாலோ – நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ/ மாணவியர் ஒவ்வொருவருக்கும் ரூ.50,000/– வைப்பு நிதியாக வழங்கப்பட்டு வந்தது.

பார்வை (3) காணும் அரசாணையின் படி மேற்கண்ட வைப்பு நிதியானது ரூ.50,000/–லிருந்து ரூ.75,000/– ஆக 27.11.2014 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டு அதிலிருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத்தொகை ஆகியவை அந்த மாணவ, மாணவியரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் அவர்களது பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (4) காணும் அரசாணையின் படி மாணவ, மாணவியரின் நலன் கருதி காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு உரிய காலத்திற்குள் அம்மாணவர்களுக்கு நிவாரணம் வழங்க பள்ளிக்கல்வி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

பார்வை (5) காணும் செயல்முறைகளின் படி 01.07.2023–க்கு பிறகு தங்கள் அலுவலகத்தில் பெறப்படும் கருத்துருக்களை பார்வை 1 முதல் 3 வரை உள்ள

www.Padasalai.Net

அரசாணைகளை பின்பற்றி நன்கு ஆய்வு செய்து, தகுதியான கருத்துருக்கள் மீது உரிய ஆணைகள் வழங்கி, அதற்குரிய முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் மற்றும் இணைப்புகளுடன் ஏற்கனவே தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு சமர்பிக்க பின்பற்றிய நடைமுறைகளைப் பின்பற்றி, தகுதியுடைய கருத்துருக்களை இவ்வியக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலருக்கும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் வைப்பு நிதி பத்திரம் புதுப்பித்தல் மற்றும் நிரந்தர வைப்பு முதிர்வு தொகை ஆகிய நேர்வுகளில் ஏற்கனவே பின்பற்றி வந்த நடைமுறைகளைப் பின்பற்றி தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு நேரடியாக கருத்துருக்களை அனுப்பி வைத்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் முதன்மைக்கல்வி அலுவலருக்கும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இணையதள மூலம் சார்ந்த மாணவர்களின் புதிய கருத்துருக்களை சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் EMIS Portal வழியாக சமர்ப்பித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. பள்ளித் தலைமையாசிரியர் சமர்ப்பித்துள்ள கருத்துருக்களை ஆய்வு செய்து சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலரின் EMIS Portal மூலம் சரிபார்த்து உரிய ஆணைகளுடன் ஒப்புதல் (Apporval) வழங்கி கருத்துருவின் நகல் ஒன்றினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பிட வைத்திட அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் மேற்காண் வழிமுறைகளை பின்பற்றி 01.07.2023–க்கு பிறகு பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு அனுப்பப்பட்ட கருத்துருக்கள் அனைத்தும் EMIS Portal வழியாக சமர்ப்பிக்கும் வகையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

13/13

இயக்குநர்

பெறுதல்,

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

02.02.24